**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 116/2019**

PW1 – பாலசுந்தரம் த/பெ குப்பு
நாள் – 08.01.2024.

**குறுக்கு விசாரணை :**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அரசாலமங்கலம் ஜுவாநகரில் உள்ளது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும் 12/2B ஆகும். தாவா சொத்து என்ன வகைபாடு சேர்ந்தது என்றால் அது நஞ்சை ஆகும். தாவா சொத்தின் பரப்பளவு தெரியுமா என்றால் 280 குழி ஆகும். செண்ட் தெரியாது. 3 குழி சேர்ந்தது 1 செண்ட் என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். சிவலிங்கம் நிலத்திற்கு கிழக்கு, மாணிக்கம் ஆசாரி நிலத்திற்கு மேற்கு, குகன் நிலத்திற்கும் ரோட்டிற்கும் தெற்கு, கன்னிக்கோயில் உள்பாலிக்கு வடக்கில் அமைந்துள்ளது. தாவா சொத்து நில உச்சவரம்பு சட்டப்படி பெருமாள் என்பவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

பெருமாள் பெயரில் F படிவம் வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். பெருமாளுக்கு தாவா புல எண்ணில் 1 ஏக்கர் 4 செண்ட் ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். பெருமாள் மேற்படி சொத்தை அனுபவித்துக் கொண்டு அரசுக்கு சீலிங் தொகை செலுத்தி வந்தார் என்றால் சரிதான். பெருமாள் இறந்து விட்டார் என்றால் சரிதான். பெருமாள் இறந்தபிறகு பெருமாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை கலியமூர்த்தி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். கலியமூர்த்தியும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கலியமூர்த்தி இறந்த பிறகு மேற்படி சொத்தை 1,2 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் கலியமூர்த்தி உயிருடன் இருந்தபோதே எனக்கு சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார். எதன் அடிப்படையில் கலியமூர்த்தி எனக்கு சுவாதீனம் ஒப்படைத்தார் என்றால் 1990-1991 ல் குத்தகைக்காக என்னிடம் சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார்.

எனக்கும் கலியமூர்த்திக்கும் ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனக்கும், கலியமூர்த்திக்கும் எவ்வித குத்தகை ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றாலும் தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கபடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான தீர்வையை 1-ம் பிரதிவாதிதான் செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. நான்தான் செலுத்தி வருகிறேன்.

11.04.2018-ல் 1-ம் பிரதிவாதிக்கு மயிலாடுதுறை வருவாய் கோட்டாச்சிரால் தீர்வை சான்று வழங்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணம் பதிவு செய்து கொடுக்க காலம் தாமதம் செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதன் அடிப்படையில் அவர் கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்றால் கலியமூர்த்தி தாவா சொத்தை எனக்கு விற்பனை மாதிரி செய்துள்ளதால் கிரயம் செய்து கொடுக்க வேண்டும். எந்த தேதியில் விற்பனை மாதிரி செய்து கொடுத்துள்ளார் என்றால் 28.08.2002 ஆம் தேதி ஆகும். வா.சா.ஆ.1 ஆனது யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் கலியமூர்த்தி என்பவர் பாலசுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்ததாகும்.

தாவா சொத்தை விற்பதாக யார் என்னிடம் கூறினார்கள் என்றால் கலியமூர்த்தி தான் கூறினார். என்றைக்கு கூறினார் என்றால் 24.08.2002 ல் கூறினார். அன்றே பத்திரமும் வாங்கப்பட்டது. எத்தனை பத்திரம் வாங்கப்பட்டது என்றால் ஒரு 20 ரூபாய் பத்திரம் மற்றும் 2 வெள்ளைத்தாள்கள் கொண்டதாகும். யார் பத்திரம் வாங்கியது என்றால் நான்தான் வாங்கினேன் . அவர் உடன் இருந்தார். யாரிடம் பத்திரம் வாங்கியது என்றால் நடராஜனா, நாகராஜனா என்று பெயர் நினைவில்லை. பத்திரம் எழுதுவதற்கு யார் விவரங்களை சொன்னது என்றால் கலியமூர்த்தி தான் சொன்னார். யார் எழுதியது என்றால் M. சாமிதுரை எழுதினார். சாமிதுரை பதிவு பெற்ற எழுத்தரா என்றால் இல்லை. அவர் தான் ஊரில் எழுதப்படிக்க தெரிந்தவர் என்பதால் எழுதினார். கிரயத் தொகை எவ்வளவு என்றால் ரூ.40,800/- ஆகும்.

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். என்ன படித்துள்ளேன் என்றால் M.A., B.Ed படித்துள்ளேன். எனக்கு விவசாய நிலங்கள் தாவா கிராமத்தில் உள்ளதா என்றால் இல்லை. சீலிங் நிலம் 20 ஆண்டுகளுக்கு விற்பனை செய்யக்கூடாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் முதல் பக்கத்தில் கலியமூர்த்தியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். கலியமூர்த்தி எனக்கு விற்பனை செய்ததாக கூறும் நிலத்தின் விஸ்தீரணம் 280 குழி தான். கலியமூர்த்திக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களை நான்கெல்லையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கலியமூர்த்தியால் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கத்தில் உள்ள கையெழுத்தும் கலியமூர்த்தியினுடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் வேறு யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் பாண்டியன் மற்றும் சாரதாம்பாள். வா.சா.ஆ.1 ல் 3 வது பக்கத்தில் உள்ள கையொழுத்துக்கள் பாண்டியன் மற்றும் சாரதாம்பாள் ஆகியோர்களது கிடையாது என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கான எவ்வித கிரயத் தொகை என்னிடமிருந்து கலியமூர்த்தி பெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எனது வீட்டில் வைத்து தான் எழுதப்பட்டது. சாட்சிகளாக யார் யார் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் திருமலை, வடிவழகன், நாகராஜன், ஜெயராமன் ஆகியோர்கள் சாட்சிகளாக கையொப்பம் இட்டுள்ளார்கள். சாட்சிகளை யார் அழைத்து வந்தது என்றால் கலியமூர்த்தியும் அழைத்தார். நானும் அழைத்தேன். எதற்காக நான்கு நாட்கள் முன்பே பத்திரம் வாங்கப்பட்டது என்றால் பத்திரம் வாங்கிய அன்று முழு தொகை என்னிடம் இல்லை என்பதால் நான்கு நாள் கழித்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.2 ஐ மறுத்து பிரதிவாதிகளால் பதில் சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.4 ல் உள்ள சீலிங் தொகைகள் நிலத்தின் உரிமையாளருக்காக

என்னால் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ன் அடிப்படையில் தாவா சொத்தின் தனிப்பட்ட உரிமையை கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கலியமூர்த்தியால் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்பதால் பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. எந்த தேதியிலும் கலியமூர்த்தி எனக்கு தாவா சொத்தை குத்தகை சாகுபடிக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதன் அடிப்படையில் நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.